அம்பேத்கரின் பார்வையில் அனைவருக்குமான அரசியல்!

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை நனவாக்கும் நம்பிக்கையின் ஒளிவிளக்கு!



இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளுக்கான உள்ளடக்கிய அரசியல் என்பது இன்னும் எட்டாக்கனவாகவே உள்ளது. இந்தப் புறக்கணிப்பு அவர்களின் வாழ்க்கையின் ஏறத்தாழ அனைத்துத் தளங்களையும் பாதித்துள்ளது. இதன் விளைவாக, பல அடிப்படை உரிமைகள்கூட அவர்களுக்கு எட்டாதவையாகவே இருக்கின்றன.

மாற்றுத்திறனாளிகளையும் உரிமைகளைக் கொண்ட குடிமக்களாக அங்கீகரிக்க வேண்டும் என்ற புரிதலைப் பொதுச் சமூகம் இன்னும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லை. மேலும், சாதி, பாலினம், வாழ்விடம், வறுமை மற்றும் பிற சமூகப் பின்தங்கியநிலைகளுடனான குறுக்குவெட்டுத் தாக்கங்களும் அவர்களின் அனுபவங்களைத் தீர்மானிக்கின்றன. இதனால், அவர்களின் உரிமைகள் நடைமுறை வாழ்வில் சாத்தியமாவதற்கான வாய்ப்புகள் மேலும் தொலைதூரமாகின்றன.

மாற்றுத்திறனாளிகளை உரிமைகளைக் கொண்ட குடிமக்களாக அங்கீகரிக்கச் சமூகம் தயாராக இல்லையென்றால், அவர்களின் அரசியலுக்கான இடம் எங்கே இருக்கிறது? அவர்களின் அரசியல் வெளிப்படையாகத் தெரியாவிட்டால், அவர்களின் முன்னுரிமைகள் எவ்வாறு அரசியல் செயல்திட்டத்தில் இடம்பெறும்?

ஒரு உரிமை என்பது அதை நடைமுறையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கும்போதுதான் பொருள் பெறுகிறது. மேலும், அந்த உரிமையை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பான கடமையாளர் யார் என்பதும் தெளிவாக அடையாளம் காணப்பட வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் வரலாற்று ரீதியாக, சட்டத்தின் மூலம் உறுதிசெய்யப்பட்ட உரிமைகளாகத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுவதற்குப் பதிலாக, அறக்கொடை மற்றும் நலத்திட்ட அணுகுமுறைகளின் செல்வாக்குக்கு உட்பட்டே இருந்து வந்துள்ளன. இந்த முரண்பாட்டிற்கான தீர்வை, பாபாசாகேப் அம்பேத்கரின் உள்ளடக்கிய, உரிமை அடிப்படையிலான அரசியல் தொலைநோக்குப் பார்வையில் காண முடியும்.

இந்தியச் சமூகம், ஒரு சாய்வுதளத்தை (Ramp) அமைத்துவிட்டால் போதும், ஒரு சூழல் அணுகத்தக்கதாகிவிடும் என்று அடிக்கடி கருதுகிறது. இது அடிப்படையான கருத்தியல் தவறாகும்.

அணுகல்தன்மை என்பது இயற்பியல் அணுகல்தன்மை, செயல்முறை அணுகல்தன்மை மற்றும் தயாரிப்பு அணுகல்தன்மை ஆகிய மூன்று பரிமாணங்களையும் உள்ளடக்கியதாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இயற்பியல் அணுகல்தன்மையே பல இடங்களில் இன்னும் போதுமானதாக இல்லை. அதைவிட முக்கியமாக, செயல்முறை அணுகல்தன்மை இல்லாத நிலையில், இயற்பியல் அணுகல்தன்மை தன்னைத்தானே பயனற்றதாக்கிக் கொள்ளக்கூடும்.

உயர்கல்வி நிறுவனத்தில் ஒரு சாய்வுதளம் இருப்பதால் மட்டும் பயன் இல்லை; அங்கு கற்பித்தல், கற்றல் மற்றும் தேர்வு நடைமுறைகள் அணுகத்தக்கதாக இல்லாவிட்டால், அந்த வசதி முழுமையான பொருளைப் பெறாது. ஒரு மாணவர் கல்லூரிக்குள் உடல்ரீதியாக நுழைய முடிந்தாலும், கல்வியில் அர்த்தமுள்ள பங்கேற்புக்கான வாய்ப்பு அவருக்கு மறுக்கப்படலாம்.

தயாரிப்புகளின் அணுகல்தன்மையும் அதே அளவுக்கு முக்கியமானது. மாற்றுத்திறனாளிகளின் வாங்கும் திறனையும் அது கருத்தில் கொள்ள வேண்டும். இல்லையெனில், அணுக முடியாத அல்லது வாங்குவதற்கு இயலாத அளவுக்கு விலை உயர்ந்த தயாரிப்புகள், இயற்பியல் மற்றும் செயல்முறை அணுகல்தன்மை ஆகிய இரண்டையும் பாதிக்கக்கூடும். எனவே, அணுகல்தன்மை என்பது ஒன்றோடொன்று தொடர்புடைய கூறுகளைக் கொண்ட ஒருங்கிணைந்த அமைப்பாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

முன்னுரிமையற்றதாகக் கருதப்படும் அணுகல் தன்மை!

இந்தியாவில் மாற்றுத்திறனாளிகள் நீண்டகாலமாக அறக்கொடை அடிப்படையிலான அணுகுமுறையின் கீழ் அமைதியாகத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். மாற்றுத்திறன்கள் குறித்த போதிய விழிப்புணர்வும் பொது வெளியில் அவற்றின் போதிய தெரிவுநிலையும் இல்லாதது, இத்துறையின் அரசியல் ஓரங்கட்டலுக்குப் பங்களித்துள்ளது. பல தசாப்தங்களாக, மாற்றுத்திறன் என்பது ஜனநாயக உரிமைகளின் மையப் பிரச்சினையாகக் கருதப்படுவதற்குப் பதிலாக, நலத்திட்டங்கள், அரசு சாரா அமைப்புகள் (NGOகள்) மற்றும் அவ்வப்போது கிடைக்கும் அரசியல் கவனம் ஆகியவற்றுக்குரிய ஒரு பொருளாகவே பார்க்கப்பட்டு வந்துள்ளது.

சர்வதேச அளவிலான முன்னேற்றங்கள் படிப்படியாக இந்தியாவின் சட்ட உரையாடல்களில் அணுகல்தன்மையை முக்கியத்துவம் பெறச் செய்தன. 1995ஆம் ஆண்டின் மாற்றுத்திறனாளிகள் சட்டம் ஒரு முக்கியமான சட்டமியற்றல் மைல்கல்லாக அமைந்தது. அதைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையை (UNCRPD) இந்தியா ஏற்றுக்கொண்ட பின்னர், 2016ஆம் ஆண்டின் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் சட்டம் (Rights of Persons with Disabilities Act, 2016) சட்டக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தியது.

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான சட்டங்களில் அணுகல்தன்மை முக்கியத்துவம் பெறத் தொடங்கி மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகிவிட்டபோதிலும், உடல்ரீதியான மற்றும் நிறுவனரீதியான அணுகலின்மை தொடர்ந்து நிலவுகிறது. நீதித்துறைத் தலையீடுகள், சட்டங்கள் மற்றும் கொள்கை முன்னெடுப்புகள் சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்தியுள்ளன. எனினும், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் இன்னும் பெரும் சவால்கள் உள்ளன.

இதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்று, பொதுவான அரசியல் உரையாடல்களில் மாற்றுத்திறன் இடம்பெறாததாகும். மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் அரசியல் சார்ந்த பிரச்சினையாகப் பார்க்கப்படுவதற்குப் பதிலாக, அவை பெரும்பாலும் சமூகவியல் அல்லது நலத்திட்டம் சார்ந்த கவலையாகவே கருதப்பட்டுள்ளன.

தடைபடும் உள்ளடக்கம்!

பாகுபாட்டின் அடிப்படைக் கூறுகளாக வேறுபடுத்துதல், விலக்குதல் மற்றும் நிராகரித்தல் ஆகியவை அமைகின்றன.

இந்தியாவின் பிரதான அரசியல் நீரோட்டம், மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைகளை முக்கியத்துவ மற்றதாகவோ இரண்டாம் நிலை யான தாகவோ கருதுவதன் மூலம், அவர்களின் அரசியலைப் பெரும்பாலும் ஓரங்கட்டியே வைத்துள்ளது.

அரசியல் கட்சிகளின் அரசியலில் மாற்றுத்திறனாளிகள் இடம்பெறாமல் இருப்பது ஒரு முக்கியமான கவலையாகும். இந்த விலக்கல் குறித்து கேள்வி எழுப்பப்படும்போது, மாற்றுத்திறனுடன் வாழும் சில தனிநபர்கள் அரசியல்வாதிகளாக இருப்பதைச் சுட்டிக்காட்டி, தாங்கள் உள்ளடக்கத்தை உறுதிசெய்துள்ளதாக அரசியல் கட்சிகள் கூறக்கூடும். ஆனால், ஓர் விதிவிலக்கை முறையான பிரதிநிதித்துவத்திற்கான முன்னுதாரணமாகக் கருத முடியாது.

மாற்றுத்திறனுடன் வாழும் ஒரு தனிநபர் அரசியல்வாதியாக இருப்பது மட்டுமே, மாற்றுத்திறனாளிகள் துறையின் அரசியல் பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்பட்டுவிட்டது என்று பொருளல்ல. குறிப்பாக, மாற்றுத்திறன் என்பது ஓர் ஒருங்கிணைந்த அரசியல் அடையாளமாகவும் கொள்கை சார்ந்த கவலையாகவும் வெளிப்படுத்தப்படாதபோது, அத்தகைய தனிநபர் இருப்பு உண்மையான பிரதிநிதித்துவத்திற்கு இணையாகாது.

இந்த இடத்தில்தான், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையின் 29ஆம் பிரிவு (Article 29 of the UNCRPD) ஆழமான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. அரசியல் மற்றும் பொது வாழ்வில் மற்றவர்களுக்கு இணையான அடிப்படையில், முழுமையாகவும் திறம்படவும் பங்கேற்பதற்கான மாற்றுத்திறனாளிகளின் உரிமையை இந்தப் பிரிவு அங்கீகரிக்கிறது.

எனவே, அரசியல் பங்கேற்பு என்பது அணுகத்தக்க வாக்குச்சாவடியை ஏற்படுத்துவது அல்லது மாற்றுத்திறனாளி ஒருவர் வாக்களிப்பதைச் சாத்தியமாக்குவது என்பதோடு மட்டும் சுருக்கிவிட முடியாது. அரசியல் மற்றும் பொது விவகாரங்களில் பங்கேற்பது, அரசியல் அமைப்புகளில் இடம்பெறுவது, முடிவெடுக்கும் செயல்முறைகளில் பங்கெடுப்பது மற்றும் பரந்த ஜனநாயக உரையாடல்களில் ஈடுபடுவது ஆகியவற்றையும் அது உள்ளடக்க வேண்டும்.

பேராசிரியர் தீபக்நாதன்
கழக மாற்றுத்திறனாளிகள்
அணிச் செயலாளர்



மாற்றுத்திறனாளிகளை நலத்திட்டங்களின் செயலற்ற பயனாளிகளாகப் பார்ப்பதிலிருந்து, ஜனநாயகத்தின் செயலூக்கமுள்ள பங்கேற்பாளர்களாக அங்கீகரிப்பதற்கான முக்கியமான உரிமை அடிப்படையிலான கட்டமைப்பை 29ஆம் பிரிவு வழங்குகிறது. இருப்பினும், சட்ட அங்கீகாரம் மட்டுமே அரசியல் பங்கேற்பை நடைமுறை உண்மையாக்கிவிடாது. மாற்றுத்திறனாளிகள் இயக்கம் அரசியல் வெளிகளைத் தீவிரமாகத் தன்வசப்படுத்தி, அரசியல் உரையாடல்களில் மாற்றுத்திறன் தொடர்ந்து முக்கியத்துவத்துடன் இடம்பெறுவதை உறுதிசெய்ய வேண்டும்.

அம்பேத்கரின் உள்ளடக்கிய அரசியல்!

அரசியல் பங்கேற்பு என்பது அரசியல் பதவியை வகிப்பது மட்டுமல்ல. அரசியலில் தீவிரமாக ஈடுபடுவது, அரசியல் விழிப்புணர்வுடன் செயல்படுவது மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலம் பிரச்சினைகளுக்குப் பொறுப்புணர்வுடன் எதிர்வினையாற்றுவது ஆகியவற்றையும் அது உள்ளடக்குகிறது.

தலித் மக்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டியதன் மூலம் பாபாசாகேப் அம்பேத்கர் இதனை நிரூபித்தார். தலித் மக்களின் பிரச்சினைகளை அறக்கொடை அல்லது சமூகப்பணி என்ற வரம்புக்குள் அடைத்துவிட அவர் மறுத்தார். அவற்றை அரசியல் உரையாடலின் மையத்திற்குக் கொண்டுவந்தார்; நிலைபெற்ற அரசியல் நிலைப்பாடுகளைச் சவாலுக்கு உட்படுத்தினார்; காலனிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார்; அரசியல் பாதுகாப்புகளையும் பிரதிநிதித்துவத்தையும் வலியுறுத்தினார்.

அவரது அரசியல், இந்தியப் பொது வாழ்வில் தலித் உரிமைகள் வெளிப்படையாக அங்கீகரிக்கப்படுவதில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இடஒதுக்கீடு உள்ளிட்ட சமூக மற்றும் அரசியல் சமத்துவத்திற்கான அரசியலமைப்புப் பாதுகாப்புகள் உருவாவதற்கும் பங்களித்தது.

மாற்றுத்திறனாளிகள் இயக்கம் இந்த அரசியல் உத்தியிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள முடியும்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை நடைமுறைப்படுத்துதல்!

கண்ணுக்குப் புலப்படாதது அரசியல் கவனத்திலிருந்தும் மறைந்துவிடக்கூடும் என்பதை அம்பேத்கர் புரிந்துகொண்டிருந்தார். எனவே, மாற்றுத்திறனாளிகள் துறை, அணுகத்தக்க வாக்களிப்பு என்ற வரம்பைக் கடந்து முன்னேற வேண்டும்.

உரிமைகளுக்காகப் பிரசாரம் செய்வது, அரசியல் கட்சிகளுடன் ஈடுபடுவது, தேர்தல் உரையாடல்களில் தாக்கத்தை ஏற்படுத்துவது, அரசியல் நிறுவனங்களுக்குள் நுழைவது மற்றும் அரசியல் வெளிகளில் தங்களுக்கான இடத்தைப் பெறுவது ஆகிய அனைத்தையும் அரசியல் பங்கேற்பு உள்ளடக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் அமைப்புகள், உரிமைகளுக்கான ஆதரவு மற்றும் வலியுறுத்தல் நடவடிக்கைகளை (Advocacy) ஒரு முறையான அரசியல் செயல்பாடாக அங்கீகரிக்க வேண்டும். பிரதான ஊடகங்கள், சமூக ஊடகங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தல் சார்ந்த உரையாடல்களுடன்ஈடுபடுவது, அணுகத்தக்கவாக்குச்சாவடிகளை உறுதிசெய்வதற்கு இணையான முக்கியத்துவம் கொண்டது. UNCRPDயின் 29ஆம் பிரிவும் அம்பேத்கரின் அரசியல் மரபும் இணைந்து, மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை வெறுமனே நலத்திட்டம் சார்ந்த பிரச்சினைகளாகப் பார்க்காமல், குடியுரிமை, சமத்துவம், பிரதிநிதித்துவம் மற்றும் அரசியல் பங்கேற்பு ஆகியவற்றின் அடிப்படையில் புரிந்துகொள்வதற்கான ஒரு கட்டமைப்பை வழங்குகின்றன.

காலம் கடந்தாலும் பரவாயில்லை; இனியாவது பாபாசாகேப் அம்பேத்கரின் கரங்களைப் பற்றிக்கொண்டு, உள்ளடக்கிய அரசியலின் பாதையில் பயணிப்போம். மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை நிஜமாக்குவோம்!

தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு தெரிவிக்காமல் விழா நடத்தினால் தி.மு.க. சார்பில் அறப்போர்!

சட்டமன்ற உறுப்பினர்களை புறக்கணித்து அரசு விழாக்கள் நடத்துவதா?

திருமயத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, அக்.23- புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே உள்ள துளையானூரில் உணவுத்துறை அமைச்சர் வெங்கட்ரமணனால் திறந்து வைக்கப்பட்ட உணவு தானிய சேமிப்பு கிடங்கை முன்னாள் அமைச்சரும் திருமயம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.ரகுபதி ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி கடந்த திராவிட மாடல் ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட திட்டங்களை திறப்பு விழா செய்து தங்களது மூலதன செலவுகளாக காட்டிக் கொண்டு இருக்கின்ற ஒரு அதிசய ஆட்சி தான் த.வெ.க. நடத்திக் கொண்டிருக்கிறது. 2 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடந்த ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படாமல் இருந்த நெல் சேமிப்பு கிடங்கை உணவுத்துறை அமைச்சரும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரும் திறந்து வைத்துள்ளனர்.

இந்த தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரான எனக்கு எந்த விதத் தகவலும் சொல்லாமல் தொலைபேசியில் கூட கூறாமல் மாவட்ட நிர்வாகமும் உணவுத்துறை அதிகாரிகளும் யாருடைய அழைப்பும் எனக்கு இல்லை கடந்த ஆட்சி காலத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த பகுதியில் விளையக்கூடிய நெல் தானியங்களை சேமிக்க வசதியாக இந்த நெல் சேமிப்பு கிடங்கை கட்டினோம். இந்த நெல் சேமிப்பு கிடங்கில் எங்களுடைய பெயரை நாங்கள் எங்கும் வைக்கவில்லை ஆனால் த.வெ.க. அமைச்சர்கள் விளம்பரத்திற்காக திறந்து வைத்துவிட்டு ஊரெங்கும் எங்களுடைய சாதனைகள் போன்று ஊரெங்கும் பதாகைகள் வைத்து ஒரு திருவிழா கோலத்தை நடத்தி விட்டு சென்றிருக்கிறார்கள். வெறும் வெட்டி கழகத்தின் வெட்டி ஆட்சி இந்த ஆட்சி என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு இதே போல் பொன்னமராவதியிலும் ஒரு நெல் சேமிப்பு கிடங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. சார்பில் அறப்போர்!

அதற்கும் எனக்கு அழைப்பு விடுக்கவில்லை தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை புறக்கணித்து நடக்கின்ற விழாக்கள் தான் இந்த விழாக்கள் இனி எதிர்காலத்தில் இது போன்ற விழாக்கள் நடந்தால் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு தெரிவிக்காமல் இருந்தால் திமுக சார்பில் அறப்போர் மறியல் போர் நடைபெறும். தகவல் தெரிவிக்க வேண்டியது அவர்களின் கடமை அந்த கடமையிலிருந்து மாவட்ட நிர்வாகமும் உணவு துறையும் தவறி இருக்கிறது. கடந்த திமுக ஆட்சி காலத்தில் விராலி மலை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் விஜயபாஸ்கருக்கு அனைத்து தகவல்களையும் தெரிவித்துள்ளோம் அரசு நிகழ்ச்சி மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளில் விஜயபாஸ்கரும் வந்து கலந்து கொண்டுள்ளார்.

பல நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கவில்லை அது அவருடைய விருப்பம் ஆனால் தெரிவிக்காமல் நாங்கள் எந்த நிகழ்ச்சியில் நடத்தியது கிடையாது. திமுக சட்டமன்ற உறுப்பினர்களை புறக்கணிக்கிற ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கிறது. திமுக ஆட்சியில் தான் நல்லது நடந்திருக்கிறது என்று மக்கள் உணர்ந்து கொள்ளக்கூடிய காலம் தற்போது வந்துள்ளது. அமைச்சர் செங்கோட்டையன் முன்னுக்கு பின்னாக பேசக்கூடிய ஒரு பயந்தாங்கோலி அமைச்சர் தமிழ்நாட்டிலேயே கிடையாது. மேடையில் பேசியதை போல விராலி மலை சட்டமன்ற தொகுதியினுடைய வேட்பாளர் இன்று நான்தான் கூறினேன்.

பத்திரிக்கையாளர் சந்திப்பில் நான் சொல்லி இருக்க வேண்டும். ஆனால் நான் அப்படி சொல்ல வில்லை என்று பத்திரிக்கையாளர்கள் கூறியுள்ளார்.



செங்கோட்டையன் பேச்சுக்கு த.வெ.க.வில் மரியாதை இல்லை!

அமைச்சர் செங்கோட்டையன் பேச்சுக்கு தவெக விலும் மரியாதை கிடையாது மக்களிடத்திலும் மரியாதை கிடையாது. விஜய் கட்சி ஆரம்பிக்கும் போது தனுஷ் கட்சி ஆரம்பிக்க கூடாதா தமிழகம் முழுவதும் எல்லா நடிகர்களும் ஆளுக்கு ஒரு கட்சியை ஆரம்பித்து விட்டு வரட்டும் அடுத்த தேர்தலில் பல கட்சி நடிகர்களின் சின்னங்கள் இருக்கும் கடந்த 4 மாதங்களில் என்ன மூலதன செலவுகள் என்று கேட்டால் சொல்ல வக்கில்லாத ஆட்சி தான் தற்போது நடந்து கொண்டிருக்கிறது.

முதலமைச்சர் காவிரி நீரை மேட்டூரில் திறக்கச் சென்றால் 5 கோடி ரூபாய் செலவு என்று சொல்கிறார்கள் இது மாதிரி கூத்துகள் நடக்கின்ற ஆட்சி தான் இன்றைய ஆட்சி தனுஷ் தனியாக நிற்பதால் அல்லது வேறு அரசியல் கட்சியில் சேர்வதா என்பதை அவருடைய விருப்பம் ஆனால் நாங்கள் தனித்து நின்று வெற்றி காண்போம் அதுதான் திமுக மக்கள் பிரதிநிதியாக என்னை அழைக்கவில்லை என்று மாவட்ட ஆட்சியரிடம் புகார் தெரிவிக்க மாட்டேன் தெரிவித்தால் அவர்கள் காதில் என்ன விழப்போகிறதா அதனால்தான் பத்திரிகையாளர்களிடம் சொல்கிறோம் உங்களிடம் சொன்னார் அவர்கள் காதில் விழும் நாங்கள் கூறினால் மாவட்ட ஆட்சியர் காதில் விழாது. அரசு அதிகாரிகளுக்கும் த.வெ.க. கட்சிக்காரர்களுக்கு தெரிந்து மட்டுமே தற்போதைய அரசு விழாக்கள் நடைபெறுகிறது.

சென்னையில் கடந்த திமுக ஆட்சியில் மழை நீர் வடிகால் போன்றவற்றை நல்ல முறையில் செய்து வைத்துள்ளோம். அதனால்தான் தண்ணீர் தேங்காமல் ஓடிவிட்டது. ஆனால் இவர்கள் நான்கு மாதத்தில் வந்து கிழித்து விட்டேன் என்று அமைச்சர் செங்கோட்டையன் கூறுகிறார். நான்கு மாதத்தில் சென்னையில் எதையும் செய்ய முடியாது. மக்களை காப்பாற்ற கூடிய அளவிற்கு நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய துணிச்சல் அவர்களுக்கு கிடையாது. முதலமைச்சர் கூறுகிறார் அமைச்சர்கள் எல்லாம் தண்ணீரில் இறங்கி செல்லுங்கள் என்று அமைச்சர்கள் எல்லாம் தண்ணீரில் இறங்கி ரீல்ஸ் எடுப்பார்கள் போட்டில் போனார், நீரில் போனார் என்று ரீல்ஸ் வந்து கொண்டே இருக்கும் நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்தால் மரத்தை வெட்ட முடியுமா மரத்தை வெட்டுவது போல் ரீல்ஸ் கொடுக்கிறார். தற்போது ரீல்ஸ் ஆட்சி தான் நடக்கிறது.

நாங்கள் ரீல்ஸ் கொடுக்கவில்லை!

நாங்கள் ரீல்ஸ் கொடுக்கவில்லை போஸ் கொடுக்கவில்லை உண்மையாக உழைத்தோம் உணவுத்துறை அமைச்சர் வெங்கட்ரமணன் ஆடிட்டர் அவர் வருமான வரி செலுத்தக்கூடிய வசதியானவர் அவருக்கு அரிசி ரேஷன் அட்டை கிடையாது. சக்கரை அட்டை தான் வைத்துள்ளார். ஆனால் ரேஷன் அரிசி சாப்பிடுவதாக கூறுகிறார். அவர்கள் வீட்டில் வேலை பார்க்கிறவர்களின் அரிசியை வாங்கி சாப்பிடுவார் என்று நினைக்கிறேன். அது வேலைக்காரர்களுக்கு செய்யக்கூடிய பாவம் அந்தப் பாவத்தையும் அவர் செய்கிறாரா கடந்த காலத்தில் ரேஷன் அரிசி சாப்பிட்டேன் என்று உணவுத்துறை அமைச்சர் கூறுவதை பார்க்கும் போது கடந்த காலத்தில் ரேஷனில் தரமான அரிசி நாங்கள் கொடுத்து இருக்கிறோம் என்று உணவுத்துறை அமைச்சரே சர்டிபிகேட் கொடுக்கிறார்.

இதற்கு உணவுத்துறை அமைச்சருக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம் நாங்கள் வழங்கியது போன்ற தரமான அரிசியை இவர்கள் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் வழங்க மாட்டார்கள் சன்ன ரக அரிசி 30 ரூபாய் என்று கூறிவிட்டு ஐந்து கிலோ மட்டும் கொடுக்கிறார்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் 20 கிலோ முதல் 30 கிலோ வரை விலைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் திண்டுக்கல்லில் ஒரு கிலோ அரிசி 100 ரூபாய் புதுக் கோட்டையில் 90 ரூபாய் இந்த விலைக்கு அரிசி வாங்கி மக்களால் சாப்பிட முடியுமா ஒரு நூறு பேருக்கு மட்டும் 30 ரூபாய்க்கு அரிசி கொடுத்துவிட்டு அமைச்சர்கள் போஸ் கொடுத்து சென்று விட்டார்கள் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் கிடைக்கவில்லை இதுதான் இந்த ஆட்சியின் நிலை போஸ் கொடுப்பார்கள் ஒரு திட்டத்தை அறிவிப்பார்கள். போஸ் கொடுப்பார்கள் திட்டத்தை முடிவிட்டு செல்வார்கள் 30 ரூபாய் சன்ன ரக அரிசி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் கிடைக்கவில்லை அதுதான் உண்மை.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

தலைமைக் கழக அறிவிப்பு!

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கருநாக்கமுத்தன்பட்டியை சேர்ந்த மு. வீரராகவன் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்: 22.10.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆசிரியர் வெ.கோவிந்தன்

அக்டோபர் 23 (2021)



ஆசிரியராயப் பணியாற்றி வந்த இவர், கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது ஆசிரியர் பணியை துறந்து, 1977ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

பேர்ணாம்பட்டு நகர பொறுப்பாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை பேர்ணாம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினர், நகர வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.